An Australian Government Initiative

end exploitation

கட்டாயத் திருமணம்

# கட்டாயத் திருமணம்:
# பாதுகாப்புத் திட்டம்

### கட்டாயத் திருமணம் என்றால் என்ன?

ஆஸ்திரேலியாவிலுள்ள ஒவ்வொருவருக்கும் தாம் திருமணம் முடிப்பதா, மற்றும் எவரை எப்போது தாம் மணம் முடிப்பது என்று தீர்மானிக்கும் சுதந்திரம் உண்டு. ஒருவர் தான் விரும்பாதபோது திருமணம் செய்ய வைப்பது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதோடு ஆஸ்திரேலியாவில் அது குற்றமும் ஆகும். கட்டாயத் திருமணம் என்பது சுயவிருப்பமும் பூரண சம்மதமும் இன்றி, வற்புறுத்தி, அச்சுறுத்தி, ஏமாற்றிச் செய்யப்படும் திருமணத்தைக் குறிக்கும். வயது, பாலினம், பாலியல் நாட்டம் அல்லது கலாசாரப் பின்னணி என்ற வேறுபாடின்றி எவரும் கட்டாயத் திருமணத்திற்கு ஆளாகலாம். கட்டாயத் திருமணம் பற்றிய மேலதிகத் தகவல்களை பின்வரும் இணையத்தில் நீங்கள் காணலாம். <www.ag.gov.au/forcedmarriage>

### சுயமாகவும் பூரணமாகவும் சம்மதமளித்தல் என்பது என்ன?

*சுயமாகவும் பூரணமாகவும்* சம்மதமளித்தல் என்பது ஒருவர் தான் எவரை எப்போது திருமணம் செய்வது என்பதையும் தாம் திருமணம் செய்ய வேண்டுமா என்பதையும் தெரிவுசெய்ய முடியுமாயிருப்பதைக் குறிக்கும். சுயவிருப்பமும் பூரண சம்மதமும் என்பது என்ன என்பதை பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

| சுயவிருப்பமும் பூரண சம்மதமும் என்பது: | சுயவிருப்பமும் பூரண சம்மதமும் என்பது இதுவல்ல: |
|---|---|
| • திருமணம் செய்ய நீங்கள் ஆயத்தமாயிருப்பதாக நினைப்பதால் திருமணம் செய்ய விருப்பம் தெரிவிக்கின்றீர்கள் | • உடல் அல்லது பாலியல் ரீதியான வன்முறை உட்பட உங்களுக்கோ அல்லது வேறெவருக்கோ எதிரான அச்சுறுத்தல் அல்லது பலத்தைப் பயன்படுத்தல் அல்லது பலவந்தம் காரணமாக திருமணம் செய்ய நீங்கள் இணங்குகிறீர்கள் |
| • திருமணம் செய்ய நீங்கள் ஆசைப்படுவதால் திருமணம் செய்ய விருப்பம் தெரிவிக்கின்றீர்கள் | • உங்கள் விருப்பத்திற்கு மாறாக பிடித்து வைக்கப்பட்டிருப்பதால் அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் திருமணம் செய்ய இணங்குகிறீர்கள் |
| • உங்கள் எதிர்காலத் துணைவராக வரக்கூடுமானவரை திருமணம் செய்ய நீங்கள் விரும்புவதால் திருமணம் செய்ய விருப்பம் தெரிவிக்கின்றீர்கள் | • உங்கள் குடும்பத்திற்கு அவமானம் ஏற்படுவதை நீங்கள் விரும்பாதது உட்பட, உணர்வு அல்லது உளரீதியான அழுத்தம் காரணமாக திருமணம் செய்ய இணங்குகிறீர்கள் |
| • உங்களுக்கேற்படக் கூடுமான பின்விளைவுகளைப் பற்றிய பயமின்றி திருமணம் செய்யாதிருக்க முடிவுவெடுக்க முடியுமாயிருத்தல், மற்றும் | • உங்கள் பெற்றோர் அல்லது பாட்டன் பாட்டி போன்ற நம்பிக்கைப் பொறுப்பு அல்லது அதிகாரமுள்ள ஒருவர் மீதுள்ள கீழ்ப்படிவு காரணமாக திருமணம் செய்ய சம்மதமளித்தல் |
| • வேறெவருக்கும் ஏற்படக்கூடுமான பின்விளைவுகளைப் பற்றிய பயமின்றி திருமணம் செய்யாதிருக்க முடிவுவெடுக்க முடியுமாயிருத்தல். | • உங்கள் கலாசாரத்தில் அல்லது சமூகத்தில் உள்ளவர்கள் அதனைத்தான் எதிர்பார்ப்பார்கள் என்பதால் திருமணம் செய்ய இணக்கமளித்தல் |
| | • நீங்கள் பணரீதியாகத் துஷ்பிரயோகப்படுத்தப்படுவதால் திருமணம் செய்ய இணக்கமளித்தல் உ.மாக, உங்கள் உழைப்பூதியம், அல்லது உணவு மற்றும் வேறு வகையான ஆதரவுதவிகள் நிறுத்தி வைக்கப்படல் |
| | • ஏதோ ஒன்றைக் கூறி பலவந்தமாய் வற்புறுத்துதல் அல்லது உங்களது கடவுச்சீட்டு போன்ற ஆவணமொன்றை தராமல் வைத்துக் கொண்டிருத்தல் உட்பட வேறுவிதமான பலவந்தம் காரணமாக திருமணம் செய்ய சம்மதமளித்தல் |
| | • முன்மொழியப்பட்டுள்ள திருமணத்தைப் பற்றி வஞ்சிக்கப்பட்டு அல்லது ஏமாற்றப்பட்ட நிலையில் திருமணத்திற்கு இணக்கமளித்தல். |

*தாம் எதற்கு சம்மதமளிக்கிறோம் என்று விளங்கிக் கொள்ள இயலாத ஒருவரால் சுயமாகவும் பூரணமாகவும் சம்மதமளிக்க முடியாது. அதாவது சிலரைப் பொறுத்தளவில் அவர்களது வயது மற்றும் புத்தி சுவாதீனத்தின் தன்மை காரணமாக செல்லுபடியாகும் சம்மதமொன்றை வழங்க முடியாது.*

# கட்டாயத் திருமணம்: பாதுகாப்புத் திட்டம்

## பாதுகாப்புத் திட்டம் என்றால் என்ன, அது எனக்கு எவ்வாறு உதவும்?

பாதுகாப்புத் திட்டம் என்பது உங்களை நீங்களே பாதுகாத்துக்கொள்ளவும், பாதுகாப்பாக உதவி பெறவும் உங்களுக்கு உதவும் ஒரு வழிகாட்டியாகும். உங்களைத் திருமணம் முடிக்கச் செய்வது பற்றி நீங்கள் பயந்தால், திருமணம் செய்துகொள்ள மறுக்க நீங்கள் பயந்தால் அல்லது, நீங்கள் ஒப்புக்கொள்ளாத ஒரு திருமண உறவை விட்டு நீங்குவதற்கு நீங்கள் பயந்தால் நீங்கள் இத்திட்டத்தைப் பயன்படுத்த முடியும்.

இப்பாதுகாப்புத் திட்டத்தைப் பூரணப்படுத்துவது பின்வருவம் விடயங்களில் உங்களுக்கு உதவும்:

- உதவி தேடவும் பிறருடன் பாதுகாப்பான முறையில் பேசவும்
- பாதுகாப்பற்ற சூழல்களில் நீங்கள் எவ்வாறு எதிர்வினையாற்றுவது என்பதை முன்கூட்டியே திட்டமிடல்
- வீட்டில் பாதுகாப்பாக இருப்பதற்கு அல்லது பாதுகாப்பாக வீட்டைவிட்டுச் செல்ல ஆயத்தமாவதற்கு, மற்றும்
- திருமணத்துக்காக நீங்கள் வெளிநாட்டுக்குக் கொண்டுசெல்லப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு.

## பாதுகாப்புத் திட்டத்தை நான் பூரணப்படுத்துவது எப்படி?

பின்வரும் ஆறு படிமுறைகளைப் பின்பற்றி நீங்கள் அதைப் பூரணப்படுத்தலாம்:

1. அவ்வாறு செய்வது பாதுகாப்பாக இருக்குமானால், ஒரு நண்பர் அல்லது ஆசிரியர் போன்ற உங்கள் நம்பிக்கைக்குரிய ஒருவரை பாதுகாப்புத் திட்டத்தைச் செய்வதற்கு உதவுமாறு கேளுங்கள்.
2. உங்களுக்கு இடையூறு இல்லாத அல்லது உங்களைக் கண்டுபிடிக்க முடியாத பாதுகாப்பான ஒரு இடத்துக்குச் செல்லுங்கள்.
3. பாதுகாப்பாகத் தொடர்புகொள்ளுதல் பற்றிய அடுத்த பக்கத்திலுள்ள முக்கியமான தகவல்களைக் கவனமாக வாசியுங்கள்.
4. உங்களால் முடிந்த அளவு நன்றாக அதிலுள்ள வினாக்களுக்கு விடையளியுங்கள்
5. உங்கள் பாதுகாப்புத் திட்டத்தை ஒரு பாதுகாப்பான இடத்தில் வையுங்கள். அதை நீங்கள் மறைத்துவைக்கவேண்டி அல்லது நீங்கள் நம்பும் ஒருவரிடம் அதைக் கொடுத்துவைக்கவேண்டி இருக்கலாம்.
6. அது எப்போதும் நடப்புநாள் வரைக்கும் சரியானதாக இருக்கும் வகையில் அதை அடிக்கடி சரிபாருங்கள்.

**அமைப்புகளுக்கான குறிப்பு:** இக்கட்டாயத் திருமணப் பாதுகாப்புத் திட்டத்தை நிரப்புவதற்கு நீங்கள் ஒருவருக்கு உதவுபவராயின், 'பின்னிணைப்பு ஒன்றில்' தரப்பட்டுள்ள, கட்டாயத் திருமணத்துக்கு ஆளாகியுள்ள அல்லது ஆளாகும் ஆபத்திலுள்ள ஒருவரைச் சந்திப்பது தொடர்பான தகவல்களை வாசித்து அதை விளங்கிக்கொள்வது அவசியம்.

## நான் எவ்வாறு உதவிபெற முடியும்?

நீங்கள் உணர்வுரீதியாக, உடல்ரீதியாக அல்லது வார்த்தையளவில் துன்புறுத்தப்பட்டு வந்தால், அல்லது பாதுகாப்பற்றிருப்பதாக உணர்ந்தால் நீங்கள் உதவி தேடலாம்.

நீங்கள் அல்லது வேறு ஒருவர் உடனடியான ஆபத்தில் இருப்பதாக நிங்கள் நினைத்தால் உடனடியாக **மூன்று சைபர்களை (000) அழைத்து உதவி கேளுங்கள்.** அல்லது உதவிக்காகவும் ஆலோசனைக்காகவும் 'ஆஸ்திரேலிய பெடரல் காவல்துறை'யைத் (Australian Federal Police (AFP)) தொடர்பு கொள்ளலாம். கட்டாயத் திருமணத்துக்கு ஆளான அல்லது ஆளாகும் ஆபத்தில் உள்ளவர்களை AFP பாதுகாக்கிறது. இத்தகைய நிலைமைகளைக் கையாள அவர்கள் விசேட பயிற்சி பெற்றுள்ளனர். அவர்கள் உதவிக்காக உங்களை உரியவர்களிடம் அனுப்பமுடியும், பாதுகாப்பான தங்குமிடம், நிதி உதவி, மருத்துவ சிகிச்சை, உளவள ஆலோசனை மற்றும் சட்ட, புலப்பெயர்வு ஆலோசனை பெற உதவமுடியும். **நீங்கள் AFP யை அனாமதேயமாக 131 AFP (131 237) இலக்கத்தில் அல்லது AFP யின் ஆட்கடத்தல் வலைத்தளப் பக்கத்தில் உள்ள படிவத்தை நிரப்புவதன் மூலம் தொடர்புகொள்ளலாம்: வலைத்தளம்: <https://forms.afp.gov.au/online_forms/human_trafficking_form>**. ஒரு நண்பர் அல்லது அவரது பெற்றோர், அல்லது மூத்த சகோதரர்கள், ஒரு ஆசிரியர் அல்லது கூட வேலைசெய்பவர் போன்ற உங்கள் நம்பிக்கைக்குரிய எவருடனும் கூட நீங்கள் பேசலாம். நீங்கள் உடனடியான ஆபத்தில் இல்லை யென்றால், சில **விசேட சமூக நிறுவனங்கள்** கூட உங்களுக்கு உதவியும் ஆதரவும் வழங்க முடியும்.

'மொழிபெயர்ப்பு மற்றும் உரை பெயர்ப்புச் சேவை'யை 131 450 எனும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## பாதுகாப்புத் திட்டம்:

# பாதுகாப்பாகத் தொடர்புகொள்வது எப்படி?

நீங்கள் கட்டாயத் திருமணத்துக்கு ஆளாகி அல்லது ஆளாகக்கூடிய ஆபத்தில் இருந்தால் நிங்கள் உதவி தேடுவது முக்கியம். நீங்கள் உதவியும் ஆதரவும் பெற முயலுபவர்களுடன் பாதுகாப்பாகத் தொடர்புகொள்வதற்கு பின்வரும் தகவல்கள் உங்களுக்கு உதவும்.

### தொலைபேசியில் பேசுவது அல்லது குறுந்தகவல் அனுப்புவது

- யாராவது உங்கள் தொலைபேசியைப் பரிசோதிக்கலாம் என்று நீங்கள் சந்தேகித்தால், உங்கள் நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் நீங்கள் தொலைபேசியைக் கடன்பெறலாம். உங்கள் பணியிடத்தில், பாடசாலையில் உள்ள தொலைபேசியை அல்லது கட்டணத் தொலைபேசியைப் பயன்படுத்தலாம். பாதுகாப்பாக இருக்குமானால், ஒரு மலிவான தொலைபேசியை இரகசியமாக வாங்கி அதைப் பயன்படுத்தலாம்.
- நீங்கள் தனியாக அல்லது நம்பிக்கைக்குரிய ஒருவருடன் இருக்கும்போது மட்டும் அழையுங்கள்.
- நம்பிக்கைக்குரிய ஒருவருடன் தொலைபேசியில் பேசும்போது அல்லது குறுந்தகவல் அனுப்பும்போது பாதுகாப்பாகப் பாவிக்க ஒரு சொல்லை யோசியுங்கள். எதிர்காலத்தில் உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு இப்பாதுகாப்புச் சொல்லை நீங்கள் பயன்படுத்தலாம். நீங்கள் பேசுவதற்கு அது பாதுகாப்பானது. (உதாரணமாக, இப்பாதுகாப்புச்சொல் நீங்கள் ஒவ்வொரு முறையும் பேசும்போது கேட்கப்படும் ஒரு வினாவுக்கான விடையாக இருக்கலாம்.) உங்களுக்கும் உங்கள் நம்பிக்கைக்குரியவருக்கும் மட்டும் தெரிந்த ஒரு பாதுகாப்புச் சொல்லைத் தெரிவு செய்க.
- உங்கள் தொலைபேசி அழைப்புகள் எல்லாம் தொலைபேசி கட்டணப் பட்டியலில் அல்லது அழைப்புப் பதிவில் இடம்பெறும் என்பதை நினைவில் இருத்துங்கள்.
- முடியுமாயின் அழைப்புப் பதிவிலிருந்து உங்கள் அழைப்புகளை அகற்றிவிடுங்கள். தரைத் தொலைபேசியைப் பயன்படுத்துவதாயின், உங்கள் அழைப்பு முடிந்தபின் பிறிதொரு எண்ணை அழையுங்கள். மீள் அழைப்பு வசதியைப் பயன்படுத்தி நீங்கள் யாரை அழைத்தீர்கள் என்பதை பிறிதொருவர் அடையாளம் காண்பதை இது தடுக்கும்.
- நீங்கள் அனுப்பிய அல்லது பெற்ற குறுஞ் செய்திகளை நீங்கள் அழித்துவிட வேண்டி இருக்கலாம்.
- 131 AFP (131 237) என்ற AFP யின் இலக்கத்தையும் உங்கள் நமபிக்கைக்கு உரியவரின் இலக்கத்தையும் சந்தேகம் எழாதிருக்க வேறு பெயர்களில் பதிவுசெய்யுங்கள்.

### மின்னஞ்சலைப் பயன்படுத்துதல்

- ஒரு பொதுக் கணினியை அல்லது உங்கள் குடும்ப அல்லது சமூகத்தினர் எவரும் அணுக முடியாத ஒரு கணினியைப் பயன்படுத்த முயலுங்கள். நம்பகமான ஒருவரின் கணினியை நீங்கள் கடன்பெறலாம். அல்லது பாடசாலை, பணியிடம் அல்லது பொது நூலகத்தில் உள்ள கணினியைப் பயன்படுத்தலாம்.
- உங்கள் குடும்ப உறுப்பினர் அல்லது சமூகத்தினர் இக்கணினியைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு இருக்கும் என்று நீங்கள் கருதினால், உங்கள் தேடல் பதிவுகளையும் 'குக்கீஸ்' (cookies) களையும் அழித்துவிடுங்கள்.
- உங்கள் குடும்பத்திலோ சமூகத்திலோ யாரும் அணுக முடியாத ஒரு தனிப்பட்ட மின்னஞ்சல் விலாசத்தைப் பயன்படுத்துங்கள். 'Gmail' அல்லது 'Yahoo' ஊடாக நீங்கள் ஒரு புதிய இலவச மின்னஞ்சல் விலாசத்தை உருவாக்கிக் கொள்ளலாம்.
- உங்கள் மின்னஞ்சல் வேறு ஒருவரால் வாசிக்கப்படவோ, அச்சிடப்படவோ அல்லது பிறிதொருவருக்கு அனுப்பப்படவோ இயலும் என்ற ஆபத்தையும் நினைவில் வையுங்கள்.
- நீங்கள் அனுப்பிய அல்லது பெற்ற மின்னஞ்சல் செய்திகளை நீங்கள் அழித்துவிட வேண்டி இருக்கலாம்.

### யாரையாவது நேருக்குநேர் சந்தித்தல்

- வேறுயாராலும் உங்களை அடையாளம் காண முடியாத பாதுகாப்பான ஒரு தனிப்பட்ட இடத்தில் சந்தியுங்கள்.
- உங்கள் குடும்பத்தில் அல்லது சமூகத்தில் அங்கத்தவராக இல்லாத ஒருவரை அனுமதியின்றிச் சந்திப்பது உங்களுக்குக் கஷ்டமாக இருக்கலாம். அப்படியாயின், உங்கள் நம்பிக்கைக்குரிய, உங்கள் இருவரையும் சேர்த்து சந்திக்கவைக்கக்கூடிய இன்னொருவரை ஒழுங்குபடுத்தித் தரக்கூடிய ஒருவருடன் சந்திக்க முயலுங்கள்.
- நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை உங்கள் குடும்பமோ சமூகமோ அறிய முடியாத ஒரு இடத்திலும் நீங்கள் சந்திக்க முயலலாம். உங்கள் பாடசாலை, பணியிடம் அல்லது ஒரு மருத்துவரின் 'கிளினிக்' போன்ற ஒரு 'தனிப்பட்ட' சோதனை மேற்கொள்ள வேண்டிய ஒரு இடமாக இருக்கலாம்.

# பாதுகாப்புத் திட்டம்:

## உருமாதிரி

### நான் யாருடன் பேசலாம்?

*பாதுகாப்புத் திட்டத்தின் பிரதியொன்றை நீங்கள் வைத்திருக்க விரும்பாவிட்டால், நீங்கள் அதைப் பூரணப்படுத்தி புள்ளிக் கோடுகளைக் கொண்ட பெட்டிக்குள் இருக்கும் முக்கியமான தகவல்களை வெட்டி எடுக்கலாம். வெட்டி எடுக்கப்பட்ட துண்டை மறைவாகவும், எவ்வாறு உதவியும் ஆலோசனையும் பெறுவது என்பதை அறியும் வகையில் எளிதில் எடுக்கக் கூடியதாகவும் வைத்திருங்கள்.*

☐ பாதுகாப்பாகத் தொடர்புகொள்வது பற்றி முதல் பக்கத்திலுள்ள தகவலை நான் வாசித்திருக்கிறேன்.

☐ உதவி, ஆதரவு, ஆலோசனை என்பவற்றுக்காக நான் தொடர்புகொள்ள வேண்டிய ஆட்களும் நிறுவனங்களும்:

- 'ஆஸ்திரேலிய பெடரல் காவல்துறை' (The Australian Federal Police (AFP)) ____________ 131 AFP (131 237)
- ____________
- ____________
- ____________

☐ இந்த இலக்கங்களின் பட்டியலைப் பாதுகாப்பான இடத்தில் வைப்பேன் ____________

☐ தொலைபேசி / குறுஞ்செய்தி / மின்னஞ்சல் / நேர்முகம் மூலம் நான் ____________ தொடர்புகொள்கையில் பின்வருவனவற்றைச் செய்வதன் மூலம் நான் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வேன்.

- ____________
- ____________
- ____________

### நான் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி எனக்கு நிச்சயம் இல்லை.

*நீங்கள் யாரோ ஒரவரைத் திருமணம் செய்ய வற்புறுத்தப்படலாம் என்றும், அதையிட்டு என்ன செய்வது என்று தெரியாமல் கவலைப்படுபவராயின் இப்பகுதி உங்களுக்கு உதவும்.*

☐ நான் திருமணம் முடிக்க விரும்பவில்லையாயின் நான் நம்புகின்ற, நான் பேசக்கூடிய ஒருவர்: ____________

☐ பூரணப்படுத்தப்பட்ட எனது பாதுகாப்புத் திட்டப் பிரதி ஒன்றை என் நம்பிக்கைக்குரிய இந்த நபரிடம் கொடுத்துவைப்பேன்: ____________

☐ நான் சௌகரியமானதாகவும் பாதுகாப்பாகவும் உள்ளதாக உணர்ந்தால் கட்டாயத் திருமணம் பற்றி எனது குடும்பத்திலும் சமூகத்திலும் உள்ள இவர்களிடம் பேசுவேன் :

____________

☐ ஆஸ்திரேலியாவில் கட்டாயத் திருமணம் சட்டவிரோதமானது என்பதையும் நான் விரும்பாத ஒருவரைத் திருமணம் செய்வதற்கு என்னைக் கட்டாயப்படுத்த யாருக்கும் உரிமை இல்லை என்பதையும் நான் அவர்களுக்கு விளக்குவேன். பின்வருமாறு சொல்வதன் மூலம் நான் இதைச் செய்வேன்:

☐ இவர்களுடன் பேசுவதற்கு நான் இந்த நபரின் உதவியைப் பெற முடியும்:

## வீட்டில் பாதுகாப்பாயிருப்பதற்கு நான் என்ன செய்யலாம்?

*நீங்கள் பாதுகாப்பாக இருப்பதாக உணர்ந்தாலும் வீட்டைவிட்டு விரைவாகவும் பாதுகாப்பாகவும் வெளியேறத் தயாராக இருப்பது முக்கியம்.*

☐ பின்வரும் மூன்று சாத்தியமான சூழல்கள் வீட்டில் எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையலாம்:

1.
2.
3.

☐ இந்நிலைமைகளை நான் பின்வரும் வழியில் கையாளலாம்:

1.
2.
3.

☐ அவ்வாறு செய்வது பாதுகாப்பாக இருக்குமாயின் நடந்த திகதி, நேரங்கள் உட்பட அச்சுறுத்தல்கள், வன்முறை, துஷ்பிரயோகம், துன்புறுத்தல் ஆகிய எதையும் பற்றிய விரிவான பட்டியல் ஒன்றை வைத்திருப்பேன்.

☐ விரைவாகவும் பாதுகாப்பாகவும் நான் வீட்டை விட்டு வெளியேறவேண்டியிருந்தால் நான் போகக்கூடிய மூன்று பாதுகாப்பான இடங்கள்:

1.
- முகவரி:
- தொடர்பு விபரங்கள் (அலுவலக நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரம் உட்பட):
- இந்த பாதுகாப்பான இடங்களுக்கு விரைவாகவும் பாதுகாப்பாகவும் நான் போய்ச்சேரக்கூடிய வழி (பஸ் பாதை முதலியன):

2.
- முகவரி:
- தொடர்பு விபரங்கள் (அலுவலக நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரம் உட்பட):
- இந்த பாதுகாப்பான இடங்களுக்கு விரைவாகவும் பாதுகாப்பாகவும் நான் போய்ச்சேரக்கூடிய வழி (பஸ் பாதை முதலியன):

3.

- முகவரி:
- தொடர்பு விபரங்கள் (அலுவலக நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரம் உட்பட):
- இந்த பாதுகாப்பான இடங்களுக்கு விரைவாகவும் பாதுகாப்பாகவும் நான் போய்ச்சேரக்கூடிய வழி (பஸ் பாதை முதலியன):

☐ நான் வெளியேற வேண்டியிருந்தால் என்னுடன் கொண்டுபோக வேண்டிய முக்கியமான ஆவணங்கள்:

- *கடவுச் சீட்டு*
- *சாரதி அனுமதிப்பத்திரம்*
- *வேறு புகைப்பட அடையாளப் பத்திரங்கள்*
- *பிறப்பு மற்றும் / அல்லது திருமணச் சான்றிதழ்*
- *மெடிகெயர் அட்டை*
- *வங்கி விபரங்கள்*
-
-
-

☐ முடியுமாயின் இவ்வாவணங்களின் பிரதிகளை எடுத்து இலகுவாக எடுக்கக்கூடிய ஒரு பாதுகாப்பான இடத்தில் வைப்பேன் அல்லது நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் கொடுப்பேன்.

☐ எனது வீடு / பாடசாலை / பணியிடத்திலிருந்து வெளியேற விரைவான பாதுகாப்பான வழிகள்:

☐ இந்த வழிகளில் விரைவாக வெளியேறுவதற்கு நான் பயிற்சி எடுப்பேன்.

## என் பிள்ளைகளை எவ்வாறு பாதுகாப்பாக வைப்பேன்?

- [ ] என் பிள்ளைகளால் தொலைபேசியைப் பயன்படுத்தி பொலிசையோ நான் நம்பும் ஒருவரையோ உதவிக்காக அழைக்கவும் தங்கள் முகவரியைக் கொடுக்கவும் இயலும் என்பதை நான் உறுதிப்படுத்திக்கொள்வேன்.
- [ ] என் பிள்ளைகளுடன் ஒரு சங்கேதச் சொல்லைப் பயன்படுத்துவது பற்றி நான் யோசிப்பேன். அதன் மூலம் நான் உதவிக்காக அவர்களை யாரையாவது அழைக்கச் சொல்கிறேன் என்பது அவர்களுக்குத் தெரியும்.
- [ ] எனது பிள்ளைகளைப் பாதகாப்பது பற்றி நான் கவலைப்படுவதாக என் பிள்ளைகளின் பாடசாலையில் உள்ள இவர்களுக்கு நான் சொல்வேன்:

## நான் வெளிநாடு போகவேண்டியிருக்கலாம் என்று நான் நினைத்தால்?

- [ ] என் வாழ்க்கைத் துணையுடன் நான் வெளிநாடு கொண்டுபோகப்படுவேன் அல்லது வெளிநாட்டில் திருமணம் செய்துவைக்கப் படுவேன் என்று நான் நினைத்தால் முடிந்த அளவு விரைவில் உதவியும் ஆலோசனையும் பெறுவதற்காக ஒரு விசேட சமூக நிறுவனத்தைத் தொடர்புகொள்வேன்
- [ ] என் குடும்பத்தினர் என்னை வெளிநாடு செல்லக் கேட்டால், நான் திருமணம் முடித்து வைக்கப்படுவேன் என்று நான் சந்தேகப்பட்டால் பயணத்தைத் தவிர்ப்பதற்காக நான் பின்வரும் சாட்டுகளைப் பயன்படுத்துவேன்:
  - 
  - 
  - 
  - 
- [ ] வெளிநாடு செல்வது பாதுகாப்பானது என்று நான் தீர்மானித்தால் நான் நம்பும் இவரிடம்____________________ நான் எங்கு போகிறேன் நான் எவ்வளவு காலம் அங்கிருப்பேன் என்பது பற்றி என்னால் திரட்ட முடிந்த அளவு தகவலைச் சொல்லுவேன். என்னால் முடியுமாயின், எனது கடவுச் சீட்டுப் பிரதி, பயண விபரம், வெளிநாட்டில் இருக்கையில் தொடர்பு விபரம் என்பவற்றையும் இவரிடம் கொடுப்பேன்.
- [ ] எனது விருப்பத்துக்கு மாறாக நான் விமான நிலையத்துக்குக் கொண்டுசெல்லப் பட்டால் அல்லது விமான நிலையத்தில் இருக்கும்போது அவ்வாறு உணர்ந்தால் முடிந்த அளவு விரைவில் விமான நிலைய அலுவலரிடம் நான் உதவி கேட்பேன்.
- [ ] நான் வெளிநாட்டுக்குக் கொண்டுசெல்லப்பட்டால், அண்மையிலுள்ள ஆஸ்திரேலிய தூதரகத்தை / உதவித்தூதரகத்தை உதவிக்காகத் தொடர்புகொள்வேன் அல்லது கன்பறாவில் உள்ள 24 மணிநேர தூதரக அவசர மையத்தை +61 2 6261 3305 என்ற இலக்கத்தில் தொலைபேசிமூலம் அல்லது +61 421 269 080 என்ற இலக்கத்தில் குறுஞ்செய்தி மூலம் தொடர்புகொள்வேன்.
- [ ] என்னைக் கொண்டுசெல்லப்பட்டுள்ளதாக நான் கருதும் வெளிநாட்டில் அண்மையிலுள்ள ஆஸ்திரேலிய தூதரகம்.˙. உதவித்தூதரகம்:
  - நகரம்:
  - தூதரக / பணியக முகவரி:
  - தூதரக / பணியக தொலைபேசி இலக்கம்:
  - தூதரக / பணியக மின்னஞ்சல்:

வெளிநாடுகளிலுள்ள ஆஸ்திரேலிய தூதரகங்களின் பட்டியல் ஒன்று பின்வரும் வலைத்தளத்தில் கிடைக்கும்:
<www.dfat.gov.au/missions/>

## நான் வீட்டைவிட்டுப் போகவேண்டுமானால் நான் என்ன செய்யவேண்டும்?

*வெளியேறும் நேரம் மிகவும் அபாயகரமானதாகலாம்.*

☐ நான் பாதுகாப்பின்றி இருப்பதாக உணர்ந்து, வீட்டை விட்டு வெளியேறுவதற்குத் தீர்மானித்தால், நான் வெளியேறுமுன் உதவிக்கும் ஆலோசனைக்கும் பின்வருவோரை அல்லது நிறுவனங்களை தொடர்புகொள்வேன்:

AFP

- 
- 
- 

☐ நான் அவர்களுடன் தங்கமுடியுமா என நம்பிக்கைக்குரிய இவரிடம் கேட்பேன்: ____________

☐ நான் போகும்போது பின்வரும் முக்கியமான ஆவணங்களையும் (பிள்ளைகளுடையதும் உட்பட) கொண்டுசெல்வேன்:

- *கடவுச்சீட்டு*
- *சாரதி அனுமதிப்பத்திரம்*
- *வேறு புகைப்பட அடையாளப் பத்திரங்கள்*
- *பிறப்பு மற்றும்/அல்லது திருமணச் சான்றிதழ்*
- *மெடிகெயர் அட்டை*
- *வங்கி விபரங்கள்*
- 

☐ முடியுமாயின் இவ்வாவணங்களின் பிரதிகளை எடுத்து இலகுவாக எடுக்கக்கூடிய ஒரு பாதுகாப்பான இடத்தில் வைப்பேன் அல்லது நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் கொடுப்பேன்.

☐ பின்வரும் ஏனையவற்றைப் போகும் போது என்னுடன் எடுத்துச்செல்வேன்:

- *அண்மையில் எடுத்த எனது புகைப்படம்.*
- *வீடு, வேலைத்தலம் மற்றும்/அல்லது கார் திறப்புகள்*
- *பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள்*
- *பணம்/வங்கி அட்டைகள்*
- *மேலதிக உடைகள்*
- *எனக்கு உதவும் யாரையேனும் அடையாளப் படுத்தக்கூடிய அல்லது நான் எங்கு சென்றிருக்கிறேன் என்பதை அவர்கள் அறியப் பயன்படும் ஏதேனும் தகவல்கள்*
- *கைத்தொலைபேசி*
- 

☐ இயலுமாயின் நான் வெளியேறுமுன் எனது சொந்த வங்கிக் கணக்கு ஒன்றை இங்கு திறந்துகொள்வேன்: ____________

☐ நான் எங்கு சென்றிருக்கிறேன் என்பதை அறிந்தவர்கள் யாரும் இத்தகவலை வேறு யாருக்கும் தெரிவிக்கமாட்டார்கள் என்பதை நான் உறுதிப்படுத்திக்கொள்வேன்.

### நான் வெளியேறியபின் நான் பாதுகாப்பாயிருப்பது எப்படி?

உதவி, ஆதரவு, ஆலோசனை என்பவற்றுக்காக நான் பின்வருவோருடன் தொடர்பு கொள்வேன்:

- AFP
- 
- 

☐ எனது கைத்தொலைபேசி இலக்கத்தையும் எனது கணினிக் கடவுச்சொல், கட்டணச்சீட்டு முகவரிகள் உட்பட வேறு சொந்த விபரங்களையும் நான் மாற்றிக்கொள்வேன்.

☐ நான் வழக்கமாகப் பொருட்கள் வாங்கும் இடங்கள், பணியிடத்துக்கு அல்லது பாடசாலைக்கு நான் செல்லும் பாதைகள் உட்பட எனது அன்றாட வழமைகளை மாற்றிக்கொள்வேன்.

☐ முடியுமாயின், என் பிள்ளைகளைக் கூட்டிச்சென்று கூட்டிவர அனுமதிக்கப்பட்ட பராமரிப்பாளரிடம் என் பிள்ளைகள் வேறுயாருடனும் வேறு எங்கும் செல்ல அனுமதிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்வேன்.

☐ சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் போது கவனமாக இருப்பேன். அடையாளம் காணக்கூடிய ஆட்களையோ இடங்களையோ கொண்ட புகைப்படங்களை அதில் இடமாட்டேன்.

☐ நடந்திருக்கக் கூடிய எனது திருமணத்தை சட்டரீதியாக முடிவுக்குக் கொண்டுவருவது பற்றி (சமூக சட்ட மையம் போன்றவற்றினுடாக) நான் ஒரு வக்கீலுடன் பேசுவேன். பின்வரும் வலைத்தளத்தில் எனக்குச் சமீபத்திலுள்ள சமூக சட்ட மையத்தை (Community Legal Centre )என்னால் கண்டுகொள்ள முடியும்: <http://www.naclc.org.au/>.

☐ எனது கடிதங்களை எனது புதிய முகவரியிலன்றி ஒரு தபால்பெட்டி இலக்கத்தில் பெற்றுக்கொள்வேன்.

☐ 'ஆஸ்திரேலிய தேர்தல் ஆணைய'த்தைத் (Australian Electoral Commission) தொடர்புகொண்டு என்னை ஒரு மௌனத் தேர்வாளராக (a silent elector) அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்வேன். தேர்வாளர் பட்டியலிலிருந்து எனது பெயரும் முகவரியும் நீக்கப்படும் என்பது இதன் பொருள்.

☐ நான் வீட்டாரால் தொடரப்பட்டால் நான் என்ன செய்வது என்பது பற்றிச் சிந்திப்பேன்.

- *வீட்டுக்கோ அல்லது தனியாக இருக்கக்கூடிய ஒரு இடத்துக்கோ அல்லது மற்றவர்களிடமிருந்து தூரமாகவோ போக வேண்டாம்.*
- *நீங்கள் ஒரு பஸ்ஸில் இருந்தால் உங்கள் நிறுத்தத்தில் இறங்க வேண்டாம். ஒன்று, பஸ்ஸிலேயே இருந்துகொண்டு சாரதியிடம் உதவி கேளுங்கள், அல்லது பலர் இருக்கும் ஒரு பஸ் நிறுத்தத்தில் இறங்குங்கள்.*
- *நீங்கள் நடந்துகொண்டிருந்தால், பாதுகாப்பாக இருக்கும்பட்சத்தில் திசை திரும்புங்கள். முடிந்த அளவு பிறருக்கு நெருக்கமாக இருங்கள், நீங்கள் உதவிபெறக்கூடிய அண்மிய இடத்தக்குச் செல்லுங்கள்.*
- *உங்களிடம் தொலைபேசி இருந்தால் உங்கள் நம்பிக்கைக்குரிய ஒருவரை அழைத்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் உங்களைச் சந்திக்கச் சொல்லுங்கள்.*

## பின்னிணைப்பு ஒன்று

# கட்டாயத் திருமணத்தக்கு ஆளான அல்லது ஆளாகும் ஆபத்தில் இருக்கும் ஒருவரைச் சந்திப்பது பற்றிய தகவல்கள்.

☐ எல்லா நேரத்திலும் மிக முக்கிய கவனத்துக்குரியது உங்களுடைய பாதுகாப்பும் நீங்கள் சந்திப்பவரின் பாதுகாப்புமாகும்:

**செய்க**

☐ விசேட உதவிக்கும் ஆலோசனைக்கும் 'ஆஸ்திரேலிய பெடரல் காவல்துறை'யை (AFP) நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியுது அவசியமா என்று யோசியுங்கள்.

☐ சந்திக்கும் அந்த நபரை பிறரால் அடையாளம் காணப்பட முடியாத, அவர்களுக்கு சௌகரியமும் பாதுகாப்பு உணர்வும் தரக்கூடிய ஒரு பாதுகாப்பான தனிப்பட்ட இடத்தில் தனிமையில் சந்தியுங்கள்.

☐ சாத்தியமான இடத்து, அந்த நபர் அவர்களைச் சந்திக்கும் நபரின் பால்நிலையை மற்றும் இனத்துவத்தைத் தெரிவுசெய்யக் கூடியவராக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்க.

☐ அங்கீகாரம்பெற்ற உரைபெயர்பாளர் தேவைப்படுவாரா என்பதைக் கருத்தில் கொள்க. அப்படியாயின் உரைபெயர்ப்பாளரின் இனம், பால் எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதை அவரிடம் கேட்கவும். .

☐ உரைபெயர்ப்பாளரும் அந்த நபரும் பரஸ்பரம் அறிமுகமற்றவராக இருப்பதை உறுதிப்படுத்துக. உரைபெயர்ப்பாளருக்கு அந்த நபரின் சமூகத்துடன் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை நீங்கள் கவனமாகப் பரிசீலிக்க வேண்டியும் இருக்கும். இந்தத் தொடர்புகள் எப்போதும் வெளிப்படையாகத் தெரியாது என்பதை நினைவில் கொள்க.

☐ இரகசியப் பாதுகாப்புத் தன்மை பற்றிய உங்கள் நிறுவனத்தின் கொள்கையை விளக்குக. கட்டாய அறிவிப்புத் தேவைகளை உள்ளடக்கிய உட்பட சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களைத் தவிர அந்த நபரின் நண்பர்கள், குடும்பம் அல்லது சமூகத்திற்கு அவர்களின் அனுமதியின்றி எந்தத் தகவலும் உங்களால் கொடுக்கப்படமாட்டாது என்பதைத் தெளிவுபடுத்துக. அந்த நபர் பற்றிய தகவல்களைப் பகிர்வதற்குரிய சூழ்நிலைகள் பற்றி நீங்கள் மிகத் தெளிவாக இருப்பதை உறுதிப்படுத்துக (உதாரணமாக, அவர்களுடைய பாதுகாப்பு உடனடி ஆபத்தை எதிர்நோக்கியிருப்பது).

- அவர்கள் பற்றிய தகவல்கள் பகிரப் பட்டால் அதை அந்த நபருக்கு நீங்கள் அறிவிப்பீர்கள் என்பதை உறுதிப்படுத்துக.
- ஆஸ்திரேலியாவில் நடைமுறையிலுள்ள தகவல்பகிர்வு மற்றும் அந்தரங்கப் பாதுகாப்பு பற்றிய தேவைப்பாடுகளை நீங்கள் நன்கு அறிவீர்கள் என்பதை உறுதிப்படுத்துங்கள்.
- அந்த நபர் பற்றிய தகவல்களில் எதை, யாருக்கு, எக்காலப்பகுதியில் பகிரலாம் என்பதை வரையறுத்து அவற்றை வெளியிடுவதற்குரிய சம்மதத்தை எழுத்துமூலம் பெற்றுக்கொள்க.
- ஒரு குழந்தையின் சிறந்த நலன்களைப் பேணும் வகையில், கட்டாய அறிவிப்பு செய்வதற்கான வழிகாட்டுதல்கள் உட்பட, பொருத்தமான குழந்தைப் பாதுகாப்புச் சட்டங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும் என்பதை உறுதிப்படுத்துக.

☐ கட்டாயத் திருமணம் ஒரு குற்றம் என்பதையும் அவர்கள் AFP யை உதவிக்கு அழைக்கலாம் என்பதையும் அந்த நபருக்குத் தெரியப்படுத்துக. AFP - உடனான தொடர்பு அனாமதேயமாக இருக்கலாம்.

☐ அந்த நபர் உங்களை மீண்டும் நேரடியாகச் சந்திக்க முடியாமல் இருக்கலாம் ஆகையால் முடிந்த அளவு அதிக தகவலைப் பெற முயல்க

☐ அந்த நபர் வழங்கும் தகவல்களை (அவை அற்பமாக இருப்பினும்) புறக்கணிக்கவோ உதாசீனப்படுத்தவோ வேண்டாம்.

- [ ] அந்த நபருக்குரிய சாத்தியமான எல்லாத் தெரிவுகளையும் தெளிவாக விளங்கப்படுத்துக. அவர்களுடைய விருப்பங்களை அங்கீகரித்து ஏற்றுக்கொள்க.
- [ ] அந்த நபருக்கு உடனடியான மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டால் அல்லது மனரீதியான, உணர்வுரீதியான ஆதரவு தேவைப்பட்டால் அதை உறுதிப்படுத்துக.
- [ ] வேறு யாரும் அபாயத்தில் இருந்தால் (உதாரணமாக மற்ற சகோதரர்கள்) அதை உறுதிப்படுத்துக.
- [ ] அந்த நபர் ஆஸ்திரேலியப் பிரஜையா அல்லது வதிபவரா என்பதை உறுதிப்படுத்துக.
  - அந்த நபர் ஆஸ்திரேலியப் பிரஜையோ அல்லது நிரந்தரமாக வதிபவரோ இல்லையெனில் அவர்களுடைய குடிவருகை நிலை பற்றி ஒரு பதிவு செய்யப்பட்ட புலப்பெயர்வு முகவரிடம் அல்லது 'குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்புத் திணைக்களா' (Department of Immigration and Border Protection) த்திடம் அவர்கள் ஆலோசனை பெற வேண்டும்.
- [ ] கட்டாயத் திருமணத்துக்கு ஆளான அல்லது ஆளாகும் ஆபத்திலுள்ளவர்களுக்கு விசேட உதவியும் ஆதரவும் வழங்கக்கூடிய தகுந்த நிறுவனங்களின் பெயர்கள், தொடர்பு விபரங்கள் உட்பட தகுந்த பாரப்படுத்தும் வழிவகைகளைப் விளங்கிக்கொள்க. விரிவான தகவல்கள் பின்னிணைப்பு இரண்டில் கிடைக்கும்.

**தவிர்க்கவும்**

- [ ] நிலைமை பற்றிக் கலந்துரையாடு வதற்காக குறித்த நபருடனும் அவரது குடும்ப அல்லது சமூக உறுப்பினர்களுடனும் ஒரு சந்திப்பை ஒழுங்குபடுத்த முயல்தல்.
- [ ] அந்த நபரின் வெளிப்படையான அனுமதியின்றி குடும்ப அல்லது சமூக உறுப்பினர்களைத் தொடர்புகொள்ள முயல்தல்.
- [ ] உங்களுக்குத் தெரியாத அல்லது உங்களுக்கு நம்பகமற்ற ஆட்களுடன் அந்த நபர் இருக்கும் போது அவருடன் பேசுதல் அல்லது அவரை அணுகுதல்.
- [ ] கூட்டங்களில் குடும்ப உறுப்பினர் கலந்துகொள்ள அனுமதித்தல்.
- [ ] (நண்பர்கள், அயலவர்கள், சமூகத் தலைவர்கள் உட்பட) சமூகத்தைச் சேர்ந்த எவரையும் ஒரு உரைபெயர்ப்பாளராகப் பயன்படுத்துதல்.
- [ ] உங்களால் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளைக் கொடுத்தல்.
- [ ] உங்களால் வழங்கத் தகைமையற்ற, குறிப்பாக, சட்ட அல்லது புலப்பெயர்வு பற்றிய, ஆலோசனைகளை வழங்குதல்.

# பின்னிணைப்பு இரண்டு: பரிந்துரைப்பு அடைவுவழிகள்

கட்டாயத் திருமணத்திற்கு ஆளாகியுள்ள அல்லது ஆளாகும் ஆபத்தில் இருப்பவர்களுக்கு ஆஸ்திரேலிய பெடரல் காவல்துறை (Australian Federal Police (AFP)) யினரைத் தவிர பின்வரும் விஷேட அரசுசாரா நிறுவனங்களும் ஆலோசனை மற்றும் உதவி வழங்க முடியுமாயிருக்கும்

## 1800 RESPECT (1800 737 732): 'தேசிய பாலியல் தாக்குதல், வீட்டு மற்றும் குடும்ப வன்முறை உளவள ஆலோசனை வழங்கல் சேவை' (The National Sexual Assault, Domestic & Family Violence Counselling Service)

The National Sexual Assault, Domestic & Family Violence Counselling Service (தேசிய பாலியல் தாக்குதல், வீட்டு மற்றும் குடும்ப வன்முறை உளவள ஆலோசனை வழங்கல் சேவை) என்பது அந்தரங்மான தொலைபேசி மற்றும் இணையம் மூலமான உளவள ஆலோசனை வழங்கல் சேவையாகும். இதில் பணியாற்றும் உளவள ஆலோசனைத் தொழில் வல்லுநர்கள், வீட்டு மற்றும் குடும்ப வன்முறைக்கு உட்பட்டோருக்கு மற்றும் பாலியல் தாக்குதலுக்கு உட்பட்டோருக்கு உதவி வழங்குவர்.

தொலைபேசி: 1800 RESPECT (1800 737 732)

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வலைத்தளங்கள் ஊடாக இணையம் மூலமான உளவள ஆலோசனை வழங்கல் கிடைக்கும்.

வலைத்தளம்: <www.1800respect.org.au>

## Anti-Slavery Australia ('அவுஸ்திரேலிய அடிமைத்துவ ஒழிப்பு')

Anti-Slavery Australia ('அவுஸ்திரேலிய அடிமைத்துவ ஒழிப்பு'). ஸிட்னியை மையமாகக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பு, விரிவான சட்ட ஆலோசனையையும், கட்டாயத் திருமணத்தில் உள்ளோர் அல்லது அதற்கான ஆபத்தில் இருப்போருக்காக வாதிடல் சேவை மற்றும் உதவியை வழங்குகிறது.

தொலைபேசி: 02 9514 9662

மின்னஞ்சல்: antislavery@uts.edu.au

வலைத்தளம்: <www.antislavery.org.au>

## Australian Muslim Women's Centre for Human Rights (AMWCHR) (மனித உரிமைகளுக்கான ஆஸ்திரேலிய முஸ்லிம் மகளிர் நிலையம்)

மெல்போன் நகரை மையமாகக் கொண்டு இயங்கும் AMWCHR ஆஸ்திரேலியாவிலுள்ள முஸ்லிம் பெண்களின் உரிமைகள் மற்றும் நிலையை முன்னேற்றுவதற்காக பணியாற்றுகிறது. கட்டாயத் திருமணத்துக்கு ஆளாகியுள்ளோர் அல்லது ஆளாகும் ஆபத்தில் இருப்போருக்காக விவகாரப் பணி, பரிந்துரை சேவைகள், இரண்டாம் நிலை ஆலோசனை மற்றும் வெளிக்கள சேவைகளை AMWCHR வழங்குகிறது.

தொலைபேசி: 03 9481 3000

வலைத்தளம்:
<www.ausmuslimwomenscentre.org.au>.

## Australian Red Cross (ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம்)

சமுதாயத்திலுள்ள துன்பத்துக்கு உள்ளாகும் நிலையில் உள்ளோரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் பணிபுரியும் ஒரு மனிதாபிமான நிறுவனமே Australian Red Cross (ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம்) ஆகும்.

மின்னஞ்சல்: national_stpp@redcross.org.au

வலைத்தளம்: <www.dss.gov.au>

ஆட் கடத்தலுக்கு உட்பட்டோருக்கான ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் ஆதரவுத் திட்டத்திற்காக ஒப்பந்தம் செய்து கொண்ட சேவை வழங்குநரே ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம் ஆகும். கட்டாயத் திருமணத்திற்கு ஆளாகியுள்ளோரை அல்லது ஆளாகும் ஆபத்தில் இருப்போரை AFP யால் மட்டுமே இவ்வாதரவுத் திட்டத்திற்கு சிபாரிசு செய்ய முடியும்.

## Salvation Army (இரட்சணிய சேனை)

கட்டாயத் திருமணத்துக்கு ஆளாகியுள்ளோர் அல்லது ஆளாகும் ஆபத்தில் இருப்போருக்கு Salvation Army (இரட்சணிய சேனை) வதிவிட மற்றும் விவகார முகாமை ஆதரவை வழங்குகிறது.

தொலைபேசி: 02 9211 5794

மின்னஞ்சல்: endslavery@aue.salvationarmy.org.au

வலைத்தளம்: <www.endslavery.salvos.org.au>

## குடும்பச் சட்ட தகவல்

The Family Law Courts National Enquiry Centre (குடும்ப நீதிமன்றங்கள் தேசிய விசாரிப்பு நிலையம்)

தொலைபேசி: 1300 352 000

மின்னஞ்சல்: enquiries@familylawcourts.gov.au

## மொழிபெயர்ப்பு சேவைகள்

மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவைகள்

தொலைபேசி: 131 450